# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**<u>ஆணை நாள்.02.06.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 13296/B/2024</u>**

திரு. S. முகமது உதுமான் அலி ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
பதிவாளர் (நிர்வாகம்),
சென்னை உயர்நீதிமன்றம்,
சென்னை-600104. ... பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின்மீது இவ்வாணையத்தால் (23.03.2026) அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து (02.06.2026) இன்று நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. S. முகமது உதுமான் அலி அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொது தகவல் அலுவலர், திரு.V.ஜெய்சங்கர், பதிவாளர் (நிர்வாகம்), சென்னை உயர்நீதிமன்றம் அவர்களின் பிரதிநிதியாக திருமதி.B.கீதா, உதவிப் பொது தகவல் அலுவலர், இணைப் பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்கள் ஆஜராகவில்லை.

2. இவ்வழக்கின் விசாரணையானது (02.06.2026) இன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் சென்னை உயர்நீதிமன்ற பொது தகவல் அலுவலர் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. எனவே பொது தகவல் அலுவலர் மீது காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice) கோரப்படுகின்றது.

மேற்படி இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பாணையின்மீது பொது தகவல் அலுவலர் உரிய காலத்திற்குள் விளக்கம் சமர்ப்பிக்க தவறும்பட்சத்தில், பொது

தகவல் அலுவலரிடமிருந்து விளக்கங்கள் ஏதும் பெறப்படவில்லை என தீர்மானித்து தக்க நடவடிக்கை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் பரிந்துரை செய்யப்படுமென உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண். SA 13296/B/2024**

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
பதிவாளர் (நிர்வாகம்),
சென்னை உயர்நீதிமன்றம்,
சென்னை-600104.

2. மேல்முறையீட்டாளர்,
திரு. S. முகமது உதுமான் அலி,
நியூ நேசனல் டைப்ரைட்டிங் இன்ஸ்ட்யூட்,
காரைக்குடி சாலை,
சிங்கம்புணரி,
சிவகங்கை-630502.
செல்.9894293835.

Copy to: File. GP PC
030626

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590


**வழக்கு எண். SA 13296/B/2024**

## காரணம் கேட்கும் குறிப்பாணை

## (Show Cause Notice)

திரு. S. முகமது உதுமான் அலி அவர்கள் தாக்கல் செய்திருந்த மேல்முறையீடு / புகார் மனு எண்.**SA 13296/B/2024**-இல் இவ்வாணையம் பிறப்பித்த உத்தரவின்படி **சம்மந்தப்பட்ட பொது தகவல் அலுவலர், பதிவாளர் (நிர்வாகம்), சென்னை உயர்நீதிமன்றம்** என்ற தாங்கள் பொதுத் தகவல் அலுவலர் என்ற முறையில், தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு **20(1)** மற்றும் **20(2)**-இன் கீழ் நடவடிக்கைக்கு உட்பட்டவர் என ஆணையம் கருதுவதாலும்,

சட்டப்பிரிவு **20(1)** மற்றும் **20(2)**-இன் கீழ், தங்களுக்கான பணி விதிகளின்படி நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யவும் ஆணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாலும்,

தாங்கள், தங்களின் மீது மேற்படியான பிரிவுகளின் கீழ் ஏன் நடவடிக்கை தொடர பரிந்துரை செய்யக்கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை அதற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களுடன் 12.06.2026 அன்றைய தினம் ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும்.

(த.பி.பா)

குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் விளக்கம் வரப்பெறவில்லை எனில், தாங்கள் விளக்கம் அளிப்பதற்கு ஏதுமில்லை எனக் கருதி, ஆவணங்களில் உள்ள விவரங்களின் அடிப்படையில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**/ ஆணையத்தின் ஆணைப்படி /**

**உதவிப் பதிவாளர்**

## பெறுநர்

பொது தகவல் அலுவலர்,

பதிவாளர் (நிர்வாகம்),

சென்னை உயர்நீதிமன்றம்,

சென்னை-600104.

<u>குறிப்பு:</u>

தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவுகள் **20(1)** மற்றும் **20(2)**-இன்படி ஒரு பொதுத் தகவல் அலுவலரை கீழ்க்கண்ட நிகழ்வுகளில் நடவடிக்கைக்கு உட்படுத்தலாம்:

- தகவல் கோரும் விண்ணப்பத்தை பெற மறுத்தல்
- தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு **7(1)**-இன்படி குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் தகவல் தராதது
- தகவல் கோரும் வேண்டுகோளை தீய நோக்கத்துடன் மறுத்தல்
- தெரிந்தே தவறான, முழுமையற்ற அல்லது திசை திருப்பும் வகையிலான தகவலை அளித்தல்
- வேண்டுகோளுக்கு உட்பட்ட தகவல்களை அழித்தல்